பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 ★ நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா.செழியன் எம்.ஏ.

மலர்: 20] சென்னை: ஆவணி 23 (8—9—72) வெள்ளி | வெளியூர்: ஆவணி 24 (9—9—72) சனி [இதழ்: 73

கூட்டுறவுத் துறை திருத்தியமைப்பு

திருச்சி, செப். 8—

மாநிலத்தில் கூட்டுறவுத் துறையைத் தமிழ்நாடு அரசாங்கம் திருத்தியமைத்திருக்கிறது.

இதுவரையில் 37 வட்டங்கள் இருந்துவந்துள்ளன; திருத்தியமைக்கப்பட்ட அமைப்பில்இவற்றுக்குப் பதிலாக 52 வட்டங்கள் இருக்கும்.

ஒவ்வொரு வட்டமும் ஒரு துணைப் பதிவாளர் பொறுப்பில் இருக்கும்.

அநாகரிக நிகழ்ச்சிக்கு சிறப்பான இடம்-கழகம் பற்றித் தவறான கருத்தைப் பரப்பக் காத்துக்கிடந்த ஏடுகளுக்குச் சரியான தீனி

வசைமொழிகளைக் காங்கிரசார் வாரி இறைக்கின்றனர்

காமராசர் தலைமையின்கீழ் கழகத்தைக் கடுமையாகத் தாக்குகின்றனர்

வார்த்தைகளின் வெப்பத்தைத் தாங்கிக் கொள்ளத் தயாராவோம் -- கழகத் தோழர்கட்குக் கலைஞர் மடல்

"எதைப் பெரிதுபடுத்தினால் தி. மு. கழகத்தைப் பற்றி மக்களிடம் தவறான கருத்தைப் பரப்ப முடியும -- மத்திய – மாநில அரசுகளிடையே பகையை வளர்க்க முடியும்" என்பதிலே ஒரு சில ஏடுகள் மிகுந்த அக்கறை காட்டுகின்றன; அப்படிப்பட்ட ஏடுகள் சிலவற்றுக்குச் சரியான தீனியாக ஒரு செய்தியைத் தருவதற்குத் தூத்துக்குடியிலே ஒரு சிலர், முன் கூட்டியே திட்டம் தீட்டி வைத்திருந்தனர்!

"ஆமாம் -- காத்துக்கிடந்த ஏடுகளுக்குச் செய்தி கிடைத்துவிட்டது! அதுதான், வ.உ.சி. கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற வெள்ளி விழா நிகழ்ச்சியில் சில நிமிட நேரம் நடைபெற்ற அநாகரிக நிகழ்ச்சியாகும்"

என்று கழகத் தலைவர் கலைஞர் அவர்கள், கழகத் தோழர்களுக்குத் தீட்டியுள்ள மடலில் சுட்டிக்காட்டிக் குறிப்பிட்டிருக்கிறார்! 'வெப்பம் அதிகமாகும்' என்ற தலைப்பில் எழுதியுள்ள அக்கட்டுரையில், தமிழ்நாட்டின் தலைசிறந்த தியாகிக்கு -- சிறையில் செக்கிழுத்த செம்மலுக்குச் சிறப்புச் செய்திடும் விழாவில், தியாகத்தின் மேன்மையை உணராத ஒரு சிலர் புகுந்து விளைவித்த அநாகரிகச் செயலுக்கு மட்டுமே ஒரு சில ஏடுகள் முக்கியத்துவம் தந்திருப்பதைச் சுட்டிக்காட்டியும், தலைமையமைச்சரை வரவேற்கத் தூத்துக்குடிச் செயல் வீரர்கள் செய்திருந்த கைவண்ணங்களை மறைத்துவிட்டதைக் கோடிட்டுக் காட்டியும் எழுதியிருப்பதாவது: —

'கன்னியாகுமரி, தூத்துக்குடிக்குச் சென்றுவந்த கதையெல்லாம் உன்னிடம் சொல்லாமல் இருக்க முடிகிறதா?

கப்பலோட்டிய தமிழன் சிதம்பரனாரின் நூற்றாண்டு விழாவைத் தூத்துக்குடியில் கொண்டாடுவதுதானே சிறப்புக்குரியது -- அதனால், அவர் கப்பலோட்டிய கடற்கரையோரத்தில் சிலை எழுப்ப முடிவு செய்தோம்.

'யாருக்குச் சிலை' என்று கேட்கிறாயா -- சிதம்பரனார் பிறந்த நாள் நூற்றாண்டு விழாவின்போது அவருக்குத்தான சிலை வைத்தோம்.

அதே நாளில், சிவகாசியில் வேறொரு தலைவரின் சிலைத் திறப்பு விழா கோலாகலமாகக் கொண்டாடப்பட்டதாக ஏடுகளில செய்திகள் பக்கம் பக்கமாக வெளிவந்தன.

கழகத்துக்காரன் -- அல்லது கழக அரசு சிலை திறப்பு விழா நடத்தக் கூடாதே தவிர, அவர்கள் எத்தனைச் சிலைகள் வேண்டுமானாலும் வைத்துக் கொள்ளலாம்; அதைப்பற்றி மூச்சுவிடக்கூட ஆள் இருக்காது!

அதுபோகட்டும்; தூத்துக்குடியில் சிதம்பரனார் சிலை திறக்க இந்தியத் தலைமையமைச்சர் வருகை தந்தார்கள் -- ஊரெல்லாம் விழாக் கோலம்!

சிதம்பரனாருக்குச் சிறப்பு செய்ய வரும் இந்தியத் தலைமையமைச்சரை வரவேற்றும் -- அந்த முயற்சியில் தன்னை ஒப்படைத்துக் கொண்ட உன் சகோதரன் என்னை வரவேற்றும் -- நமது கழகக் கண்மணிகள் தூத்துக்குடி நகரை அலங்கரித்திருந்த காட்சி, அடடா -- கண்கொள்ளாக் காட்சி!

எத்தனைவித வரவேற்புகள் -- எத்தனை வகைப் பதாகைகள் -- எத்தனை ஆயிரம் கொடிகள் -- தோரணங்கள்!

நகரை ஒருமுறை வலம் வந்தபோது எனக்கே பொறாமையாக இருந்தது -- தூத்துக்குடிச் செயல் வீரர்களின் கைவண்ணம் கண்டு!

தூத்துக்குடி -- கழகத்தின் கோட்டை! கழக வளர்ச்சிக்கு உயிரையும் விடக்கூடிய கொள்கைத் தங்கங்கள் உலவிடும் பூமி!

மேனாமினுக்கி அரசியலோ -- கழகத்தால் நமக்கு என்ன இலாபம் என்று கணக்கிடுகின்ற தன்னல எண்ணங்கொண்ட தன்மையோ தலைகாட்டாத இலட்சியச் சிங்கங்கள், தூத்துக்குடியில் நீண்ட நாட்களாக இந்த இயக்கப் பயிரைத் தம் செந்நீரால் வளர்த்து வருகின்றனர்!

அவர்கள், தலைமையமைச்சரையும் -- என்னையும் வரவேற்ற அந்த உணர்ச்சியில் என்னையே நான் பறிகொடுத்தேன் என்றால், பார்த்துக் கொள்ளுங்களேன்!

தமிழ்நாட்டின் தலைசிறந்த தியாகி ஒருவரைப் பாராட்டத் தலைமையமைச்சர் வருகிறார் என்பதை எண்ணி -- அந்தப் பொது நிகழ்ச்சியில் எந்த விதக் கருத்து மாறுபாடான கொள்கைக் குறிப்புகளும் வரவேற்புப் பதாகைகளில் இடம்பெறக் கூடாது என்பதிலும் அந்த வீரர்கள் கண்ணுங் கருத்துமாக இருந்திருக்கிறார்கள் என்பதைக் கண்டபோது, என் நெஞ்சம் பெருமிதத்தால் விம்மியது!

இந்திய ஒருமைப்பாடு எங்கள் இலட்சியம் --

உறவுக்குக் கைகொடுப்போம் --

இந்தியப் பாதுகாப்புக்குப் பாடுபடுவோம் --

என்பவை போன்ற முழக்கங்களும், கழகத்தினர்

(4-ம் பக்கம் பார்க்க)

போலீசு வேலைக்குப் பெண்கள் போட்டி

கோட்டயம், செப். 8—

போலீசு வேலையில் சேருவதற்குப் பெண்கள் போட்டி போட்டுக் கொண்டு வருகின்றனர்.

கேரளத்தில், பெண்கள் போலீசுப் படை இருந்து வருகிறது; இந்தப் படைக்குக் கோட்டயம் -- இடுக்கி மாவட்டங்களில் 13 பெண்கள் தேவைப்பட்டனர்; இதற்காகப் பத்திரிகைகளில் விளம்பரம் செய்யப்பட்டது.

இதற்காகக் கோட்டயத்திலுள்ள வேலைத் தேடித்தரும் அலுவலகத்தில் நேரடி பேட்டி நடத்தப்பட்டது; 600-க்கும் மேற்பட்டோர் இந்த வேலையில் சேருவதற்காக நீண்ட 'கியூ' வரிசையில் நின்று கொண்டிருந்தனர்.

பலவீனமான பிரிவினர் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர்

மத்திய அமைச்சரே கூறுகிறார்

சென்னை, செப். 8—

"தற்போதைய பணவீக்கத்தினாலும்--விலைவாசி உயர்வினாலும தொழிற்சங்க ரீதியிலான தொழிலாளரைவிட்த் தொழிற்சங்க ரீதியில் ஒன்றுபடாமல உதிரியாக இருக்கும் தொழிலாளரும்--வேலை இல்லாமல இருப்பவர்களும்தான் மிகவும் பாதிக்கப்பட்டிருப்பதாகத் தோன்றுகிறது"

என்று மத்தியத் தொழிலாளர் நலத் துறை அமைச்சர் ஆர்.கே. காடில்கர் சென்னையில் நிருபர்களிடம் கூறினார்; அவர் மேலும் குறிப்பிட்டதாவது:—

"தொழிலாளரில் பலவீனமான பிரிவினரே அதிகம் பாதிக்கப்பட்டுள்ளனர்! இப்படிப்பட்டவர்களுடைய சிரமத்தைத் தணிக்க உடனடியாக ஏதாவது செய்தாக வேண்டும் என்று மத்திய அரசு கவலை கொண்டுள்ளது."

குறைந்த-நடுத்தர வருமானக்காரர்கள்

வீடுகள் கட்டிக்கொள்ள நகர்ப்புற நிலங்கள்

விலைகளைக் குறைக்க மத்திய அரசு பரிசிலனை

புதுடில்லி, செப். 8—

பெரிய நகரங்களில் வசிக்கும் குறைந்த -- நடுத்தர வருமானக்காரர்கள் சொந்தமாக வீடுகள் கட்டிக் கொள்வதற்கு வசதியாக நகர்ப்புற நிலங்களின் விலைகளைக் குறைப்பதற்கான வழி வகைகளை மத்திய அரசு பரிசீலனை செய்துவருகிறது.

இக்கொள்கையை எவ்வகையில் உருவாக்கலாம் என்பது இப்பொழுது அரசின் தீவிர பரிசீலனையில் இருந்துவருகிறது.

இ.காங்கிரசு ஆளும்மாநிலத்தில் துப்பாக்கிச் சூடு

தயார் நிலையில் இராணுவமாம்

பாட்னா, செப். 8—

இந்திரா காங்கிரசு ஆட்சி நடத்தும் பீகார் மாநிலத்தில், மாணவர்களுக்கும் -- போலீசாருக்குமிடையில் மோதல்கள் நடந்ததையடுத்து, எந்த நிலைமையையும் சமாளிப்பதற்குரிய வகையில் இராணுவம் தயார் நிலையில் இருந்துவருகிறது.

மூன்றுவது நாளாக நடைபெற்ற மோதல்களில் மொத்தம் 200 பேர் காயமடைந்தனர்; அவர்களில் நால்வர் போலீசுத் துப்பாக்கிப் பிரயோகத்தில் காயமடைந்தவர்கள்.

பாட்னா பல்கலைக் கழகத்தை நோக்கிவந்த போலீசுக் குழுக்களை 2,000 மாணவர்கள் தாக்கியதையடுத்துப் போலீசு சுட்டது; இதில் மூவர் மாண்டதாகவும் -- இருவர் காயமடைந்ததாகவும் அதிகாரபூர்வமற்ற செய்திகள் கூறுகின்றன.

பாட்னாவில் பல்கலைக் கழகத்துக்கு வெளியில் 7-மணி நேரம் பதட்ட நிலை நீடித்தது.

மாணவர்கள் கல்லெறியில் இறங்கியதாகவும், ஒரு பால் வழங்கும் சாவடியைக் கொளுத்தியதாகவும், டெலிபோன் -- தந்தி -- மின்சாரக் கம்பங்கள் வீழ்த்தப்பட்டதாகவும், வண்டிகள் சேதப்படுத்தப்பட்டதாகவும் கூறப்படுகிறது.

வன்செயலை அடக்கப் போலீசார் தடியடிப் பிரயோகம் செய்தனர்; அதற்குப் பிறகு 150 கண்ணீர்ப் புகைக் குண்டுகளை வெடித்துக் கண்ணீர் புகையைப் போலீசார் பரப்பினர்.

அரசியலுக்கு பதே சிங் முழுக்கு

அமிர்தசரஸ், செப். 8—

சீக்கியர் கட்சியின் (அகாலி தளம்) புதிய தலைவரைத் தேர்ந்தெடுப்பதற்காக நடைபெற்ற செயற்குழுக் கூட்டத்தில், தலைவர் பதவியை ஏற்குமாறு பதே சிங்குக்கு அழைப்பு விடுக்கப்பட்டது; ஆனால் தலைவர் பதவியை ஏற்க பதே சிங் மறுத்துவிட்டார்.

இதுபற்றி அவர் கூறியிருப்பதாவது:—

"சீக்கியர் கட்சித் தலைவர் பதவியை ஏற்க நான் விரும்பவில்லை; இந்தப் பதவிக்கு என்னுடைய ஆதரவாளர் பலரையும நியமிக்கவும் நான் தயாராக இல்லை.

"அரசியலுக்கே நான் முழுக்குப் போட்டுவிட்டேன்; மீண்டும் அரசியலுக்கு நான் வரமாட்டேன்."

பதுக்கல் சர்க்கரை கைப்பற்றப்பட்டது

மதுரை, செப். 8—

"அனுமதி பெறாத கிடங்கு ஒன்றில் ஒளித்து வைக்கப்பட்டிருந்த 427 மூட்டை சர்க்கரை (ரூ. 1.25 இலட்சம் மதிப்புள்ளது) கைப்பற்றப்பட்டு -- வழக்குப் பதிவு செய்யப்பட்டிருக்கிறது"

என்று அதிகாரபூர்வமான தகவல் ஒன்று கூறுகிறது.

பாதுகாப்புவிதிகளை மீறும் தொழிலாளர்கள் கைது

வேலை நிறுத்தத்தைச் சமாளிக்க இரயில்வே அதிகாரிகள் ஏற்பாடு

முக்கிய இரயில்களை ஓட்ட வட்டார இராணுவத்தினருக்கு அழைப்பு

சென்னை, செப். 8—

தென்பகுதி இரயில்வேயில் லோகோ ஊழியர்கள் (டிரைவர்கள்--பயர்மென்கள்) தொடர்ந்து வேலைநிறுத்தம் செய்து வருகின்றனர்; இன்று 6-வது நாளாகும்; பயணிகள் போக்குவரத்தை இந்த வேலை நிறுத்தம் நிலைநிற்கச் செய்துவிட்டது.

இந்த வேலைநிறுத்தத்தால் நாள் ஒன்றுக்கு ரூ. 25 இலட்சம் இழப்பு ஏற்படுவதாக மதிப்பிடப்பட்டிருக்கிறது.

வேலைநிறுத்தம் செய்த ஊழியர்களின் எண்ணிக்கை 4,804 ஆக உயர்ந்திருக்கிறது எனத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

இந்த வேலைநிறுத்தத்தைத் தடை செய்து -- இந்தியப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் மத்திய அரசு உத்தரவு பிறப்பித்திருக்கிறது; இதன்படி தொழிலாளர்கள் உடனடியாக வேலைக்குத் திரும்பவேண்டுமென்றும், இல்லாவிட்டால் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்றும், வழக்குத் தொடரப்பட்டு தண்டனை விதிக்கப்படுமென்றும் எச்சரிக்கை செய்யப்பட்டிருக்கிறது.

வேலைநிறுத்தம் சட்ட விரோதமாக்கப்பட்டுவிட்டதால், வேலைக்கு வராதவர்களுக்கு மூன்றாண்டுச் சிறைத் தண்டனையோ--அபராதமோ அல்லது இரண்டுமோ விதிக்கப்படலாம்.

பாதுகாப்பு விதிகளைச் செயல்படுத்துவது பற்றி மாநில அரசாங்கத்துடனும் -- மாநிலப் போலீசாருடனும் இரயில்வேக்கள் தொடர்பு கொண்டிருக்கின்றன; (பாதுகாப்பு விதிகளின்படி, தொடர்ந்து வேலைக்கு வராமல் இருப்பவர்களைப் பற்றி இரயில்வேக்கள் திட்டவட்டமான புகார்கள் அளித்தால், மாநில அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்.)

பாதுகாப்பு விதிகளை மீறி மொத்தமாகத் தொடர்ந்து வேலை நிறுத்தம் செய்துவரும் லோகோ ஊழியர்கள் எந்த நிமிடத்திலும் கைது செய்யப்படலாம் என்று அதிகார வட்டாரங்கள் குறிப்பாகத் தெரிவித்தன; தயாராக இருக்குமாறு மாநிலப் போலீசு அதிகாரிகளுக்கும் கூறப்பட்டிருக்கிறது.

வேலைநிறுத்தம் தொடர்ந்து நடைபெற்றால், வெள்ளிக்கிழமையன்று அதிகாலையில் ஊழியர்கள் கைதாகக்கூடும் என்று அதிகாரிகள் குறிப்பாகத் தெரிவித்தனர்.

நேற்று மாலை சென்னை வட்டாரத்தைச் சேர்ந்த இரண்டு டிரைவர்கள் -- பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கைது செய்யப்பட்டிருப்பதாகத் தகவல் தரப்பட்டிருக்கிறது.

நேற்று காலை ரத்து செய்யப்பட்ட மெயில் -- எக்ஸ்பிரஸ் இரயில்களின் எண்ணிக்கை 28 ஆக உயர்ந்திருக்கிறது; தென் வட்டாரப் பகுதிகளில் நாளொன்றுக்கு 640 எக்ஸ்பிரஸ்--மெயில்--பாசஞ்சர் இரயில்கள் ஓடுகின்றன; இதில் இப்போது 236 இரயில்கள் மட்டுமே ஓடுகின்றன.

இரயில்களை ஓட்டுவதற்காக பெங்களூரிலிருந்து வட்டார இராணுவத்தைச் சேர்ந்த 10 பிரிவுகள் (கம்பெனிகள்) அழைக்கப்பட்டிருக்கின்றன; இன்றியமையா இரயில் போக்குவரத்தை இவர்கள் மேற்கொள்வார்கள்.

இந்தப் பிரிவினர், இரயில்களை ஓட்டுவதற்குப் பயிற்சி பெற்றவர்கள்; இவர்கள் ஏற்கனவே -- போர்க் காலங்களில் -- எல்லைப் பகுதிகளில் இரயில்களை ஓட்டியவர்களாவர்; பெங்களூர் பகுதியில் ஒரு யூனிட் (அதாவது, 24 டிரைவர்களும் -- 80 பயர்மென்களும்) வேலை தொடங்கியிருக்கிறது.

இத்தகவலை தெரிவித்த தென் பகுதி இரயில்வே தலைமை நிர்வாகி சென்னபாசப்பா, வேலை நிறுத்தம் செய்துவரும் ஊழியர்களை வேலைக்குத் திரும்புமாறு கேட்டுக்கொண்டார்; அவர்கள் பிரச்சினைகளை -- அவைகளின் தராதரத்தையொட்டி விவாதிக்கத் தயாராக இருப்பதாகக் கூறினார்; அதே நேரத்தில் அவர், 'இவ்வாறு திடீரென்று -- முன்னறிவிப்பு ஏதுமின்றி வேலை நிறுத்தம் செய்ததை நிர்வாகம் மன்னிப்பதற்குத் தயாராக இல்லை' என்றும் கூறினார்; 'வேலை நிறுத்தம் செய்பவர்கள் முதலில் வேலைக்குத் திரும்பி -- தங்கள் மீதுள்ள நன்னம்பிக்கையை உறுதிப்படுத்திக் கொள்ளவேண்டும்; இந்த வேலை நிறுத்தத்தைச் சிறியதோர் பிரச்சினையாக எடுத்துக்கொள்ள நிர்வாகம் தயாராக இல்லை' என்றும் குறிப்பிட்டார்.

ரூ. 1,000-க்குமேல் ஊதியம் பெறுகின்றனராம்

வேலைக்குத் திரும்புமாறு இரயில்வே எஞ்சின் ஊழியர்களை, துணை இரயில்வே அமைச்சர் முகம்மது ஷாபி குரேஷி வேண்டுகோள் விடுத்தார்; 'நேரடிப் பேச்சுவார்த்தைகளின் மூலம் தீர்வு காணக்கூடிய பிரச்சினைகளைப் பரிசீலனை செய்ய அரசு தயாராக இருக்கிறது' என்று குறிப்பிட்டிருக்கிறார்; ஆனால், 'நிர்வாகத்தை மிரட்டும் அளவில் உள்ள வேலை நிறுத்த நடவடிக்கையை சகித்துக் கொள்வதற்கில்லை' என்றார்; 'எத்தகைய நிலைமையையும் சமாளிக்க அரசு தயாராக இருக்கிறது' என்றார்.

"கூடுதல் ஊதியக் கோரிக்கை சரியானதல்ல; தற்போது 'ஏ' பிரிவு டிரைவர்கள் மாதம் ரூ. 1,000-க்கு மேல் ஊதியம் பெறுகின்றனர்" என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

'தலையிடுவதற்கில்லை' என்கிறார் மத்திய அமைச்சர்

"தலையிடுமாறு கோரப்பட்டாலன்றித் தென் பகுதி இரயில்வே -- தென் பகுதி மத்திய இரயில்வே எஞ்சின் ஊழியர் வேலை நிறுத்தத்தில் நான் தலையிடப் போவதில்லை; என்று மத்திய தொழிலாளர் அமைச்சர் ஆர். கே. காடில்கர் கூறியிருக்கிறார்.

போக்குவரத்துத் துறையில் ஏற்படவிருக்கும் நெருக்கடி நிலை

அவசரமாக நிறைவேற்றப்பட வேண்டிய முக்கிய திட்டங்கள்

தலைமையமைச்சர் -- இரயில்வே அமைச்சர் முன்னிலையில் முதலமைச்சர் கலைஞர் வற்புறுத்தல்

கன்னியாகுமரி, செப். 6—

இங்கு நடைபெற்ற குமரி இரயில் பாதைத் திட்டத் துவக்க விழாவில், தலைமையமைச்சர் – இரயில்வே அமைச்சர் ஆகியோர் முன்னிலையில் தமிழ்நாட்டிற்கு உடனடியாகத் தேவைப்படுகிற போக்குவரத்துத் திட்டங்களை முதலமைச்சர் கலைஞர் எடுத்துரைத்து விரைவில் நிறைவேற்றித் தருமாறு கோரிக்கை விடுத்தார்.

முதலமைச்சர் பேசுகையில் கூறியதாவது:—

"கன்னியாகுமரி மாவட்டத்தில் இரயில் பாதை வேண்டுமென்ற மக்களின் நீண்டகாலக் கோரிக்கையின் நியாயத்தைத் தமிழக அரசு உணர்ந்திருந்ததோடு -- வாய்ப்புக் கிடைத்தபோதெல்லாம் மத்திய அரசினரின் கவனத்திற்கு இதனைக் கொண்டுவந்தது.

மீண்டும் மீண்டும் நாம் கேட்டு வந்தது 1970-ல் பலன் அளிக்கத் தொடங்கியது; புதிய இருப்புப் பாதை பற்றி 'சர்வே' நடைபெற்று வருவதாக மத்திய இரயில்வே அமைச்சர் அப்போது தெரிவித்தார்; மீண்டும் 1971-ல் அப்போதைய இரயில்வே அமைச்சர் மதுரைக்கு வந்திருந்தபோது குமரி மாவட்ட மக்களின் உள்ள உணர்ச்சியை அவரிடம் வெளிப்படுத்தி -- இருப்புப் பாதைத் திட்டம் விரைவில் நிறைவேற்றப்பட வேண்டிய தன் அவசியத்தை தமிழக அரசின் சார்பில் வலியுறுத்தினோம்; அவரும் எங்களது உணர்ச்சிகள் நியாயமானவை என்று உணர்ந்து, 'விரைவில் இருப்புப் பாதைத் திட்டம் மேற்கொள்ளப்படும்' என்று உறுதியளித்தார்,

1972 பிப்ரவரியில் மீண்டும் இந்தக் கோரிக்கையை எழுப்பினோம்; இவ்வாண்டு மே 6-ந் தேதி. 'புதிய இருப்புப் பாதை அமைக்கும் பணிக்கு அனுமதி வழங்கப்பட்டுவிட்டது' என்ற மகிழ்ச்சிகரமான பதிலைப் பெற்றோம்.

என் சார்பிலும் -- தமிழக மக்களின் சார்பிலும் தலைமையமைச்சருக்கும், இரயில்வே அமைச்சருக்கும் இந்தத் திட்டத்தோடு தொடர்புடைய அனைவருக்கும் நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

கேரளம் -- தமிழ்நாடு ஆகியவற்றின் நீண்டநாளைய தேவையை இந்த இருப்புப் பாதை நிறைவு செய்யும் என்பதோடு மட்டுமல்லாமல், தேயிலை -- ரப்பர் தோட்டங்கள் நிரம்பிய பெரும் நிலப்பகுதியோடு தென் பகுதியை இந்த இருப்புப் பாதை இணைக்கும் -- கேரளத்தோடு உள்ள உறவை வளர்க்கும் என்பதுடன் தேசிய ஒருமைப்பாட்டு இணைப்பைப் பலப்படுத்தும். தொழில்களில் பின்தங்கியுள்ள இப்பகுதியில் புதிய தொழில்கள் ஏற்படவும் இது உதவும்.

தனக்கே உரிய கவர்ச்சியோடு விளங்கும் கன்னியாகுமரியைக் காணவரும் பல்லாயிரக்கணக்கான சுற்றுலாப் பயணிகளும் இதனால் பயனடைவர்.

நியாயத்தை அறிய வெகுதூரம் செல்லத் தேவையில்லை

இதற்காகத் தலைமையமைச்சருக்கு நன்றி தெரிவித்துக் கொள்ளும் அதேநேரத்தில், இன்னும் பரிசீலனைக் கட்டத்திலே இருந்து வருகின்ற வேறு முக்கியத் திட்டங்கள் பற்றியும் இங்கே குறிப்பிடுவது பொருத்தமாக இருக்குமெனக் கருதுகிறேன்.

இரயில்வே அமைச்சருடன் சில மாதங்களுக்குமுன் விவாதித்த நேரத்தில், சென்னை -- அரக்கோணம், சென்னை--கும்மிடிப்பூண்டி மார்க்கத்தை மின்சார இரயில் விடுவதற்கு ஏற்றதாக ஆக்க வேண்டியதன் அவசியத்தை எடுத்துரைத்தேன்; இவற்றுக்கான நியாயத்தை அறிய வெகு தூரம் செல்லத் தேவையில்லை.

அரக்கோணம் வட்டாரமானது சிறந்த தொழில் வளர்ச்சிக்கான வாய்ப்பைப் பெற்றுள்ளது; சதர்ன் ஸ்ட்ரக்சுரல்ஸ் — ஷாவாலசு இரயில் பெட்டி கட்டும் தொழிற்சாலை—டி. ஐ. சைக்கிள் ஆகியவை இந்த வட்டாரத்தில் அமைந்துள்ள தொழில்களில் சிலவாகும்; மாநில அரசே அரக்கோணத்தில் தொடர்வார்ப்படத் தொழிற்சாலை ஒன்றை அமைத்துள்ளது.

புதிய தொழில்களில் மிகவும் முக்கியமானது -- சென்னை எண்ணெய்ச் சுத்திகரிப்பாலையாகும்; அதன் பொருட்கள் மேற்கே பெங்களூர்வரையிலும், வடக்கே விஜயவாடா வரையும் செல்ல வேண்டியிருக்கிறது.

சென்னை நகரிலோ குடியிருப்பு வசதி நெருக்கடி நிலையை எட்டியுள்ளது; சென்னைக்கு வடக்கேயும் -- குறிப்பாக மேற்கேயும் ஏற்பட்டு வருகின்ற குடியிருப்பு வசதிகள் மேலும் தொடர்ந்து ஏற்பட விரைவான இரயில் போக்குவரத்து அமைவது அவசியம்; இதன் காரணமாகவும், சென்னை—அரக்கோணம், சென்னை—கும்மிடிப்பூண்டி பிரிவுகள் மின்சார மயமாக்கப்பட வேண்டும்.

மின்மயத் திட்டத்தின் அவசரத் தேவை

இந்த மின்சார இரயில்களுக்கு 1985-ம் ஆண்டுவரை மின்சக்தி வழங்கிட தமிழக அரசின் சார்பில் நாங்கள் ஏற்கனவே உத்தரவாதம் அளித்துவிட்டோம்; முதலில் ஒப்புக்கொண்ட கட்டணமான 8.5 காசு கட்டணம் அல்லாமல் யூனிட் ஒன்றுக்கு 7 காசு கட்டு சென்னை—திருவள்ளூர் மார்க்கத்தில் 1975 முதல் 1980 வரையிலான ஆண்டுகளில் மின்சார இரயில் விடுவதற்குத் தேவையான மின்சக்தி வழங்கிட தமிழக அரசு தீர்மானித்திருக்கிறது என்ற மகிழ்ச்சிகரமான செய்தியைத் தெரிவித்துக் கொள்கிறேன்; அரசின் இந்தத் தீர்மானத்துக்குக் காரணம், இந்த மின்மயத் திட்டத்தின் அவசரமும் முக்கியத்துவமுமே ஆகும்.

மற்ற திட்டங்கள்

கரூர்—திண்டுக்கல்—மதுரை வழியில் புதிய அகல இருப்புப் பாதை அமைப்பதும், மதுரை—மணியச்சி — தூத்துக்குடி மார்க்கத்தில் உள்ள குறுகிய பாதையை அகலப் பாதையாக மாற்றுவதும் மத்திய அரசினரால் கவனித்து நடவடிக்கை எடுக்கப்பட வேண்டிய மற்ற திட்டங்களாகும்.

வ.உ.சி. சுதேசிக் கப்பலைச் செலுத்திய தூத்துக்குடித் துறைமுகம் சுதந்தர இந்தியாவின் வளத்துக்கும் -- வளர்ச்சிக்குமான முன்னோடியாக விளங்குகிறது; துறைமுகப் பணிகளோடு மகத்தான தொழில் முயற்சிகளும் அங்கு விறுவிறுப்பாக வருகின்றன.

தூத்துக்குடி உரத் தொழிற்சாலை -- இரசாயனத் தொழிற்சாலை ஆகியவை அங்கு ஏற்பட்டுவருகின்றன; மேலும், வருங்காலத் தொழில் வளர்ச்சிக்குத் தேவையான 4,800 ஏக்கர் நிலப் பரப்பைக் கையகப்படுத்த அரசு தீர்மானித்துள்ளது; இந்தத் தொழில் வளர்ச்சியை விரைவுபடுத்த வேகமான எளிய இரயில் போக்குவரத்து இவ்வட்டாரத்தில் ஏற்படுவது ஒரு கட்டாயமாகும்; தலைமையமைச்சர் -- இரயில்வே அமைச்சர் ஆகியோரின் கனிவான கவனத்தை இவை பெறும் என்று நம்புகிறேன்.

சென்னைப் பெருநகர் போக்குவரத்து திட்டம்

தலைமை அமைச்சரின் கவனத்துக்கு நான் கொண்டுவர விரும்புகின்ற மற்றொரு முக்கியமான திட்டம் சென்னை நகரைச் சுற்றி இரயில் பாதை அமைக்க வேண்டுமென்பதாகும்.

சென்னை மாநகரம், மக்கள் தொகையிலும் -- அளவிலும் -- தொழில் துறையிலும் -- ஏனைய துறைகளிலும் பெரிதாக வளர்ந்துவிட்டது.

குடிசை மாற்று வாரியம் -- வீட்டு வசதி வாரியம் போன்ற சமூகப் பொருளாதாரத் திட்டங்களை நாங்கள் நிறைவேற்றி வருகிறோம்; இன்னும் பல தொழில்கள் ஏற்பட இருக்கின்றன; இருக்கும் போக்குவரத்து வசதிகள் போதாது.

சென்னைப் பெருநகர் போக்குவரத்துத் திட்ட அமைப்பு சென்னை நகருக்குள்ளும் -- நகரைச் சுற்றியும் விரைவான போக்குவரத்து வசதிகளைச் செய்தளிக்க ஆய்வு நடத்திவருவது அறிந்து நான் மகிழ்ச்சி அடைகிறேன்; இந்த ஆய்வுகள் விரைவில் முடியுமென்றும் தக்க திட்டங்கள் வகுக்கப்பட்டு நிறைவேற்றப்படுமென்றும் நம்புகிறேன்.

சென்னை மாநகரின் போக்குவரத்துத் தேவைகள் வருகிற ஆண்டுகளில் கட்டுக்கடங்காமல் போய் விடாதிருக்க இது குறித்துத் தலைமை அமைச்சரும் -- இரயில்வே அமைச்சரும் கவனம் செலுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்."

மத்திய அரசின் மோசமான தொழிற் கொள்கை

விளைவுகள் பற்றி முன்னாள் திட்டக் குழு உறுப்பினர் வெங்கட்ராமன் எச்சரிக்கை

சென்னை, செப். 7—

"1967-ம் ஆண்டிலிருந்து மத்திய அரசாங்கம் பின்பற்றி வந்துள்ள தொழில் கொள்கையின் விளைவாக உற்பத்தியில் தேக்கமும் -- சரக்குகளில் பற்றாக்குறையும் ஏற்பட்டிருக்கின்றன; இந்தக் கொள்கையை நாம் மாற்றியமைக்கவில்லை என்றால், தென் கிழக்கு ஆசியாவில் உள்ளமூன்றாந்தர நாடுகளின் நிலைக்கு நாம் செல்லவேண்டிவரும்"

என்று, திட்டக் குழு முன்னாள் உறுப்பினர் ஆர். வெங்கட்ராமன், சென்னை ரோட்டரி சங்கத்தில் பேசுகையில் கூறினர்.

மு.க.முத்து ரசிகர்மன்றம் தலைமை நிலைய முகவரி

பிளாட்-1, தெற்குசிவன்கோயில் தெரு, ஈசுவரர் நகர், கோடம்பாக்கம், சென்னை-24.

நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும் ஒருங்கே அமையப் பெற்றவர்

உண்மைக்கும்நேர்மைக்கும்உறைவிடமாகத்திகழ்ந்தார்

சென்னையில் வ. உ. சி. விழா -- நாவலர் -- பேராசிரியர் -- ம. பொ. சி. புகழ்மாலை

சென்னை, செப். 6—

கப்பலோட்டிய தமிழர் வ. உ. சிதம்பரனாரின் நூற்றாண்டு விழா, சென்னையில் நேற்று தமிழ்நாட்டு நல்வழி நிலையத்தின் சார்பில் சிறப்புறக் கொண்டாடப்பட்டது.

மயிலாப்பூர் கபாலீசுவரர் திருமண மண்டபத்தில் நடைபெற்ற இவ்விழாவில், கல்வியமைச்சர் நாவலர் -- மக்கள் நல்வாழ்வு அமைச்சர் பேராசிரியர் அன்பழகன் -- சிலம்புச் செல்வர் ம. பொ. சி. ஆகியோர் பங்கு கொண்டு, வ. உ. சிதம்பரனாரின் அருமை பெருமைகளை எடுத்துரைத்துப் புகழ்மாலை சூட்டினர்.

விழாவிற்கு வந்திருந்தவர்களை நெல்லை இராசானந்தம் வரவேற்றுப் பேசினர்.

விழா துவங்குவதற்கு முன்பு கொத்தமங்கலம் சுப்பு தலைமையில் கவியரங்கம் நடைபெற்றது.

நல்வழி மன்றத்தின் சார்பில் கொத்தமங்கலம் சுப்பு அவர்களுக்கு தமிழக மேலவைத் துணைத் தலைவர் சிலம்புச் செல்வர் ம. பொ. சி., பொன்னாடை அணிவித்துச் சிறப்பித்தார்,

விழாவினை துவக்கி வைத்து நாவலர் பேசுகையில் எவ்வளவு சிறப்புக்குரிய நாளை நாம் கொண்டாடுகிறோம் என்பதை, இங்கு நடைபெற்ற கவியரங்கத்தில் பங்கு பெற்ற கவிஞர் பெருமக்கள் வ. உ. சி.-யின் அருமை பெருமைகளையெல்லாம் கவிதை வடிவில் நமக்கு வரைந்து காட்டியிருக்கிறார்கள் என்பதோடு மட்டுமல்லாமல், அவரது பிறந்த நாள் விழாவானது பட்டி தொட்டிகளிலும் -- சிற்றூர் பேரூர்களிலும் -- நாடு நகரங்களிலும் உள்ள அத்தனைப்பேரும் தங்களுக்குரிய விழாவாக கொண்டாடிக் கொண்டிருக்கிறார்கள் என்பதையும் எடுத்துக் காட்டினர்.

வ. உ. சி. அவர்கள் நாட்டுப் பற்று -- மொழிப்பற்று இரண்டிலும் எப்படிச் சிறந்த எடுத்துக்காட்டாக விளங்கினர் என்பதைப் பற்றியும், சிறையில் அவருக்கு இழைக்கப்பட்ட இன்னல்களை எப்படி நெஞ்சுரத்துடன் தாங்கிக் கொண்டார் என்பதைப் பற்றியும், எதையும் விட்டுக்கொடுக்காமல் உறுதியோடு எப்படி வாழ்ந்து வந்தார் என்பதைப் பற்றியும் எடுத்துச் சொன்னர்.

"இவ்விழா இவ்வளவு சிறப்பாகக் கொண்டாடுவதற்குக் காரணம், தமிழ் மக்கள்மீது அவர் கொண்டிருந்த பேரன்பும் மதிப்பும் தான் அதற்கு முக்கிய காரணமென்றும் உண்மைக்கும் நேர்மைக்கும் -- பண்பாட்டுக்கும் சிறந்த உறைவிடமாக எப்படித் திகழ்ந்து வந்தார் என்பதைப் பற்றியும எடுத்துச் சொன்னர்.

அமைச்சர் பேராசிரியர்

மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் பேராசிரியர் க. அன்பழகன் அவர்கள், வ. உ. சி. சிதம்பரனாரின் திருவுருவப் படத்தைத் திறந்து வைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"அரசியல் -- மொழி -- தத்துவம் ஆகிய மூன்று துறைகளிலும் வ. உ. சிதம்பரனார் அவர்கள் மிகுந்த ஈடுபாடு கொண்டு சிறந்து விளங்கினர்.

உண்மையென்று ஏற்றுக் கொண்ட இலட்சியத்திற்காக அவர் இறுதிவரை போராடினர்.

நாட்டு விடுதலைக்காகப் போராடிய அதே நேரத்தில், மொழிச் சிறப்புக்காகவும், முதன் முதலில் அருந்தொண்டாற்றிய தமிழ்த் தலைவராக விளங்கினர்.

அரசியல் விழிப்புணர்ச்சி -- சமுதாய மறுமலர்ச்சி -- தமிழ் இயக்கத்தில் புரட்சி ஏதும் தோன்றாத அந்தக் காலத்தில், நாட்டு விடுதலை உணர்வை ஊட்டியும் -- தமிழ் தொண்டாற்றியும் சமுதாயச் சீர்திருத்தக் கருத்துக்களைப் புகட்டியும் ஒப்பற்ற தொண்டினை ஆற்றியதை நாமெல்லாம் வாழ்நாள் முழுவதும் எண்ணி எண்ணிப் பாராட்டக்கூடிய அரும்பெரும் பணியாகும்.

தமிழ் மறுமலர்ச்சிக்கு வித்திட்ட பெரியவர் அவர்; சிறந்த பல நூல்களை எழுதித் தமிழுக்குச் சிறப்புச் செய்தார்; அவரது வாழ்க்கை நமக்கு நல்லதோர் எடுத்துக்காட்டாக அமைந்துள்ளது; அவரது வழியில் நாட்டு உணர்வும், மொழி உணர்வும் கொண்டு நடப்போம்."

ம. பொ. சிவஞானம்

மேலவைத் துணைத் தலைவர் சிலம்புச் செல்வர் ம. பொ. சி. அவர்கள் பேசியதாவது:—

"அந்நிய ஏகாதிபத்தியத்தை எதிர்த்து வந்த காங்கிரசு இயக்கத்தை வீரநடை போடச் -- செய்து நாட்டு விடுதலை வீரர்களின் முகாமாக மாற்றிய பெருமை வ. உ. சிதம்பரனாருக்குரியதாகும்.

லோகமானிய பாலகங்காதர திலகர் -- அரவிந்தர் -- வ. உ. சிதம்பரனார் ஆகியமுப்பெரும் தேசபக்தர்கள் ஊட்டிய விடுதலை உணர்வுதான் பின்னர் பெரும் விடுதலைப் போராக மலர்ந்து நாட்டு விடுதலையை நமக்குப் பெற்றுத் தந்தது என்று சொன்னால் அது மிகையானதல்ல -- உண்மையாகும்.

வெள்ளையர் ஆட்சி -- படை -- வாணிபம் ஆகிய முப்பெரும் ஆதிக்கப் பிடியினையும் ஒருங்கே எதிர்த்தவர் வ. உ. சி. அவர்கள் ஆவார்; ஆகவேதான், அவருக்கு இரண்டு ஆயுள் தண்டனை விதித்து வெள்ளையர் ஆட்சி கொடுமைப்படுத்தியது.

கப்பலோட்டிய தமிழன் வ. உ. சி. அவர்களின் நாட்டுப் பற்றும் -- மொழிப் பற்றும்தான் தமிழகத்தின் மகத்தான மறுமலர்ச்சிக்கும் சிறப்புக்கும் அடிப்படையாக விளங்கியது.

தமிழ் நாட்டில் மட்டுமன்றி இந்திய நாடு முழுவதும் வ. உ. சி.-யின் நூற்றாண்டு விழா தேசிய விழாவாகக் கொண்டாடப்பட வேண்டும்."

விழாவில் மற்றும் பேராசிரியர் மெ. சுந்தரம், உயர் நீதிமன்ற நீதிபதி திரு. இஸ்மாயில் ஆகியோரும் கலந்துகொண்டார்.

வ. ஆ. மாவட்ட தி. மு. க. கூட்டம்

வறட்சி நிலை குறித்துத் தீர்மானம்

முதலமைச்சர் கலைஞரைச் சந்திக்கத் தூதுக் குழு

வடாற்காடு தி. மு. க. பிரதிநிதிகள் கூட்டம், 3—9—72-ல் ஆரணி டவுன் ஆலில், மாவட்ட அவைத் தலைவர் மா. பா. சாரதி எம்.எல்.ஏ. தலைமையில் நடைபெற்றது.

அதுபோது மாவட்டச் செயலாளர் தோப்பூர் திருவேங்கடம் எம்.எல்.ஏ. முன்மொழிந்து தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன:—

தி. மு. க. துணைப் பொதுச்செயலாளர் காஞ்சி மணிமொழியார், இந்திய யூனியன் முஸ்லிம் லீக் தலைவர் காயிதே மில்லத் முகமது இஸ்மாயில், சென்னைத் தொழிலாளர் தலைவர் பிரதாப் சந்திரன், மாவட்டப் பிரதிநிதிகள் சம்பத் -- பாலு, காஞ்சிபுரம் முன்னாள் நகராட்சித் தலைவர் ஏ. கே. தங்கவேலர், நாமக்கல் கவிஞர் இராமலிங்கம் பிள்ளை, சிவகங்கை கழகத் தோழர் முத்து ஆகியோர் மறைவுக்கு இரங்கல் தெரிவிக்கப்பட்டது.

நடந்து முடிந்த வ. ஆ. மா. தி. மு. க. 5-வது மாநாட்டில் வரவு-செலவுக் கணக்குகள் அங்கீகரிக்கப்பட்டது.

வ. ஆ. மாவட்டத்தில் பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாவைச் சீரும் சிறப்புடன் மாவட்ட தலைநகரிலும் -- வட்டத் தலைநகரிலும் -- கிளைக் கழகச் சார்பிலும் -- மன்றங்கள் சார்பிலும், கொண்டாடத் தீர்மானிக்கப்பட்டது.

வடாற்காடு மாவட்டத்தில் தற்போதுள்ள வறட்சியான சூழ்நிலையில் மழையின்மையால் கிராமப் புறங்களில் சிறு விவசாயம் பெருங்குடி மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டு பொருளாதார வசதியிலும் மிகவும் அவதிப்படுகின்றார்கள்; ஆகவே, வடஆற்காடு மாவட்டத்திலுள்ள சட்டமன்ற உறுப்பினர்கள் -- நாடாளுமன்ற உறுப்பினர்கள் -- வட்டக் கழகச் செயலாளர்கள் -- மாவட்டக் கழக நிர்வாகிகள் ஆகியோர் அடங்கிய குழு ஒன்று 8—9—72 சென்னை சென்று முதலமைச்சர் கலைஞர் அவர்களையும் -- பொதுச் செயலாளர் நாவலர் அவர்களையும் சந்தித்துமாவட்ட வறட்சி நிலையை விளக்கி, வட ஆற்காடு மாவட்டத்தை வறட்சி பகுதியாகப் பிரகடனப்படுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்வதெனத் தீர்மானிக்கப்பட்டது.

முதலமைச்சர் கலைஞர் பிறந்த நாளை விழி இழந்தோருக்கு ஒளி வழங்கும் விழாவாக எடுத்துத் தமிழகத்தில் உள்ள விழி இழந்தோருக்கு இலவசக் கண் சிகிச்சை செய்ய முடிவுசெய்தமைக்கு முதலமைச்சர் அவர்களுக்குப் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.

அரசு நியமனம் செய்யும் அறங்காவலர்கள் குழுக்களில் ஒருவரைத் தாழ்த்தப்பட்டவர்களை நியமனம் செய்யச் சட்டமியற்றிய தமிழக அரசுக்குப் பாராட்டுத் தெரிவிக்கப்பட்டது.

இறுதியாக கழக வளர்ச்சி குறித்து சட்டமன்ற—நாடாளுமன்ற—மாவட்டப் பிரதிநிதிகள் ஆகியோர் ஆக்கபூர்வமான ஆலோசனைகளை அளித்தார்கள்.

'நீதி கிடைக்க வேண்டும் -- அது தாமதமின்றிக் கிடைக்க வேண்டும்'

இந்தியாவிலுள்ள எல்லா உயர் நீதிமன்றங்களிலும் தீர்வு செய்யப்படாத வழக்குகளின் எண்ணிக்கை உயர்ந்துகொண்டே வருகிறது.

1969-ம் ஆண்டில் பல்வேறு மாநில உயர் நீதிமன்றங்களில் செய்யப்படாமலிருந்த வழக்குகளின் எண்ணிக்கை 3,78,033 ஆக இருந்தது; 1971-ம் ஆண்டில் இது 4,02,344 ஆக அதிகரித்துவிட்டது.

தலைமை நீதிமன்றத்திலும் தீர்க்கப்படாத வழக்குகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது: 1969-ல் 6,270 ஆக இருந்த தீர்க்கப்படாத வழக்குகளின் எண்ணிக்கை 1971-ல் 8,592 ஆக உயர்திருக்கிறது.

1971-ம் ஆண்டு இறுதி நிலவரப்படி, இந்தியாவிலேயே கல்கத்தா உயர் நீதிமன்றத்தில்தான் மிக அதிகமாக—அதாவது 77,360 வழக்குகள் தீர்க்கப்படாமலிருந்தன.

அலகாபாத் உயர் நீதிமன்றத்தில் 71,722 வழக்குகள் பாக்கியிருந்தன.

மற்ற உயர் நீதிமன்றங்களின் நிலைமை வருமாறு:—

பம்பாய் 37,296.

கேரளம் 34,433.

சென்னை 33,673.

1971-ம் ஆண்டில் துவக்கப்பட்ட இமாசலப் பிரதேச உயர் நீதிமன்றத்தில்கூட ஆண்டு இறுதியில் 1,544 வழக்குகள் தீர்வு செய்யப்படாமல் இருந்தன.

இந்த நிலைமை குறித்து இந்திய அரசு சம்மந்தப்பட்ட மாநில அரசாங்கங்களிடம் கவலை தெரிவித்திருக்கிறது; தலைமை நீதிமன்றத்திலும்; உயர் மாநிலங்களின் நீதிமன்றங்களிலும் பாக்கியிருக்கும் வழக்குகளை விரைவில் தீர்வு செய்வதற்காகவும் -- பொதுமக்கள் அதிகச் செலவின்றி விரைவில் நியாயம் பெறுவதற்காக சட்ட விதிமுறைகளை எளிதாக்குவதற்காகவும், மத்திய சட்ட -- நீதி அமைச்சகம் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறது.

இந்த நடவடிக்கைகளின் பகுதியாக, கடந்த ஐந்தாண்டுகளில் பல்வேறு உயர் நீதிமன்றங்களிலுள்ள நீதிபதிகளின் எண்ணிக்கை 245-லிருந்து 324-ஆக உயர்த்தப்பட்டிருக்கிறது.

தலைமை நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கை 12-லிருந்து 14-ஆக உயர்ந்திருக்கிறது.

குவிந்து கிடக்கும் ஏராளமான வழக்குகளைப் தீர்வு செய்யும் நோக்கத்தைக் கருத்தில் கொண்டு, உயர் நீதிமன்ற நீதிபதிகளின் எண்ணிக்கையை உயர்த்துவது பற்றிப் பரிசீலிக்குமாறு மாநில அரசாங்கங்களுக்கு யோசனை கூறப்பட்டிருக்கிறது.

தொழிலாளர் நலத்துறை அமைச்சர்

என். வி. நடராசன்

நிகழ்ச்சிகள்

செப். 11 காலை 7மணி; கோவை இராமகிருஷ்ணபுரம் தொழிற்சாலை திறப்பு; மாலை 4 மணி: தமிழ்நாடு மருத்துவ ஆய்வகம் தொழில் நுட்பப் பணியாளர் சங்க முதல் ஆண்டு விழா; 5-30 மணி: கோவை மாவட்ட பொதுத் தொழிலாளர் முன்னேற்ற சங்கம் -- பாரம் சுமக்கும் தொழிலாளர் கிளை திறப்பு; இரவு 7 மணி: கோவை 3 வது வார்டு; பாப்பநாயக்கன் பாளையம் பொதுமக்கள் வரவேற்பு.

பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழா --- 63-ஆம் ஆண்டு நிறைவு விழா

செப். 15 முதல் 30-ம் நாள் வரையில் சிறப்புறக் கொண்டாடுக!

கழக அமைப்புக்கள் -- துணை சார்பு மன்றங்கட்குப் பொதுச்செயலாளர் நாவலர் வேண்டுகோள்

சென்னை, செப். 4—

"பேரறிஞர் அண்ணா அவர்களின் அறிவுரைகளையும் -- அவர் கொண்டிருந்த இலட்சியங்களையும் மக்களுக்கு எடுத்துவிளக்கும் வகையில் சொற்பொழிவுகள் -- இன்னிசைக் கலை நிகழ்ச்சிகள் ஆகியவற்றை நடத்தியும், கழகக் கொடி ஏற்றுதல் -- அண்ணா அவர்களின் திருவுருவப் படம் திறந்துவைத்தல் -- குழந்தைகட்கு இனிப்பு வழங்குதல் -- ஏழைகட்கு உணவு அளித்தல் -- பள்ளிச் சிறுர்கட்குப் புத்தகம் மற்றும் எழுது பொருட்கள் வழங்குதல் போன்றவற்றை மேற்கொண்டும், சிறப்பான ஊர்வலங்கள் நடத்தியும், விழா நாட்களைப் பெருமைக்குரிய வகையில் கொண்டாடுமாறு கழகத்தின் மாவட்ட -- வட்ட -- பகுதி -- கிளைக் கழகங்களின் நிர்வாகிகள் -- தோழர்கள், கழகத் துணைச் சார்பு மன்றங்களின் நிர்வாக்கள் -- தோழர்கள், கழகச் சார்பான தொழிற் சங்கங்களின் நிர்வாகிகள் -- தோழர்கள் ஆகியோரை விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்"

என்று திராவிட முன்னேற்றக் கழகப் பொதுச்செயலாளர் நாவலர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாளைச் சீருடனும் சிறப்புடனும் கொண்டாடுமாறு கேட்டுக் கொள்ளும் வகையில் விடுத்துள்ள வேண்டுகோளில் குறிப்பிட்டிருக்கிறார்; அவரது அறிக்கை வருமாறு:—

"கழகத்தின் ஒப்பற்ற தலைவரும் -- தி.மு. கழகம் கண்டவரும் -- வழிகாட்டியும் -- இந்த நாட்டின் அரசியலில் கண்ணியத்தையும் கடமை உணர்வையும் மிகுதியாக வளர்த்தவரும் -- சனநாயகத்தின் பெருங்காவலராக விளங்கியவருமான பேரறிஞர் அண்ணா அவர்களின் பிறந்த நாள் விழா, செப்டம்பர் 15-ம் நாள் அமைகிறது.

கழகத் தலைவர் கலைஞர் அவர்கள் ஏற்கனவே விடுத்துள்ள வேண்டுகோளுக்கேற்பவும், ஆண்டுதோறும் நாம் கொண்டாடும் சிறப்புகளுக்கேற்பவும், செப்டம்பர் 15-ம் நாள்முதல் 30-ம் நாள் வரையிலான இரண்டு கிழமைகளைப் பேரறிஞர் அண்ணா பிறந்த நாள் விழாவாகவும் -- அறுபத்தமூன்றும் ஆண்டு நிறைவு விழாவாகவும் கொண்டு, எல்லா வகையிலும் சிறப்புறக் கொண்டாடுவதற்கு, முனைந்து ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு நாடெங்குமுள்ள கழக அமைப்புக்களையும் -- துணை சார்பு மன்றங்களையும் -- தோழர்களையும் விரும்பி வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

ஆங்காங்குள்ள கழக அமைப்புக்கள், ஆங்காங்குள்ள தோழமைக் கட்சிகளின் தலைவர்களையும் -- தோழர்களையும் விழா நாட்களின் நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்கு ஏற்பாடு செய்யலாம்.

அண்ணா அவர்கள் போதித்த கடமை -- கண்ணியம் -- கட்டுப்பாடு ஆகியவற்றுக்கேற்ப விழா நிகழ்ச்சிகள் அமைதல் வேண்டும்."

திருமணம்

முன்னாள் மாநகராட்சி உறுப்பினர் திரு. ஏ. எஸ். இராமன் அவர்களின் முதல் மகன் செல்வன்; இரா. இளங்கோவன் — செல்வி: கி. ப. வசந்தகுமாரி திருமணம், 10—9—72 காலை 8-30 மணிக்கு வடபழனி எம்.ஜி.ஆர். திடல் அரங்கில், கழகத் தலைவர் கலைஞர் தலைமையில் நடைபெறும்; புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர்., அமைச்சர்கள் என். வி. நடராசன், சத்தியவாணி முத்து மற்றும் நாடாளுமன்ற -- சட்டமன்ற உறுப்பினர்கள் வாழ்த்துரை வழங்குவர்.

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அமைத்திருந்த இரு வண்ண வரவேற்புகளில் ஆங்கில மொழியில் நிறைந்திருந்தன!

அந்தக் காட்சி பற்றிய செய்திகளையெல்லாம் நீ -- ஏடுகளில் பார்த்திருக்க முடியாது; எங்கேயாவது ஒரு மூலையில் -- 'முஜிபுர் ரகிமான்' என்று எழுதியிருந்தால், அதை எடுத்துத் தலைப்புச் செய்தி தந்து, அந்தச் செய்தியை 'நியூயார்க் டைம்ஸ்' பத்திரிகை வரையிலே அனுப்பி வைப்பார்கள்; அப்படிப்பட்ட 'உத்தம சிரேஷ்டர்கள்' இந்தச் செய்திகளை வெளியிடுவார்களா?

நான் எல்லாப் பத்திரிகைகளையும் சொல்லவில்லை என்பதையும், குறிப்பிட்ட ஒன்றிரண்டு ஏடுகளைப் பற்றித்தான் கூறுகிறேன் என்பதையும் நீ அறியாதவனல்லன்!

செக்கிழுத்த செம்மலுக்கு -- சிறையில் வாடிய தமிழ்ப் பெருமகனுக்குச் சிலை வைக்கும் விழாவைத் தமிழகமும், சிறப்பாகத் தூத்துக்குடி நகரும் கொண்டாடும்போது, தியாகத்தின் மேன்மை உணராதவர்கள் -- கைகளில் காலணி அணிந்து விழாவுக்குள் புகுந்து கலகம் விளைத்த நிகழ்ச்சி, 'அவர்கள் யார்' என்பதை வடபகுதியிலிருந்து வந்தவர்களுக்குத் தெளிவாகக் காட்டிவிட்டது.

தமிழ்நாட்டில் நடைபெறும் கிளர்ச்சிகள் -- ஆர்ப்பாட்டங்கள் அனைத்தும் சில ஏடுகளில் எப்படித் திரித்து வெளியிடப்படுகின்றன என்பதையும், உண்மைகள் எவ்வாறு மறைக்கப்படுகின்றன என்பதையும் இந்தியத் தலைமை அமைச்சரே நேரில் கண்டிடும் வாய்ப்பினைப் பெற்றார்!

'தலைமையமைச்சரை அவமானப்படுத்தத் தி.மு. கழகத்தினரே ரகளை செய்தனர்' என்று காங்கிரசு ஏடுகள் ஒன்றிரண்டு செய்திகள் வெளியிட்டிருப்பதையும் நீ கண்டிருப்பாய்; பாவம் -- என்ன செய்வார்கள்? அண்மைக்காலமாக மிகக் கடுமையாக நம்மைத் தாக்குகிறார்கள்; அதிலும், பெருந்தலைவர் காமராசரே மிகக் கடுமையான வசைமொழிகளை -- இழிமொழிகளை நம்மீது வாரி வீசுகிறார்.

மானம் கெட்டவர்கள்---
ரௌடிகள்---
ஒழுக்கமில்லாதவர்கள்--

என்பது போன்ற வார்த்தைகளும் -- நமக்கு வரும் நலிவைக்கூட கிண்டல் செய்யும் பேச்சுக்களும் -- காமராசர் கையாளும் மேடை நாகரிகமாக இருக்கிறது!

சிரங்கு பிடித்தவன் தேய்த்துச் சொறிந்துகொண்டே அதன் பிறகு எரிச்சலால் துடிப்பானே -- பார்த்திருக்கிறாய் அல்லவா -- அதுபோலக் காங்கிரசு நண்பர்கள்--காமராசர் தலைமையின்கீழ் நின்று நம்மைச் சாடுகின்றனர்! அவர்தம் வார்த்தைகளின் வெப்பம் இப்போதே தாங்க முடியாததாக இருக்கிறது. இனிமேல் அந்த வெப்பம் அதிகமாகக்கூடும்; அதனையும் தாங்கிக் கொள்ள நாம் தயாராக இருக்க வேண்டும்.

'புதிதாக அப்படியென்ன அவர்களுக்குக் கோபம் வரப்போகிறது' என்று உனக்குக் கேட்கத் தோன்றும்; 'கன்னியாகுமரி'க்குப் பிறகு அவர்களுக்குக் கோபக் காய்ச்சல் அதிகமாகுமானால், அதில் வியப்படைவதற்கு எதுவுமில்லை; அது பற்றி நாளை எழுதுகிறேன்."

திருவாரூர் நகர தி.மு.க. கிளை உறுப்பினர்கள் பேரில் ஒழுங்கு நடவடிக்கை

தஞ்சை மாவட்டம் திருவாரூர் நகர தி.மு.க. கிளை உறுப்பினர்களான கீழ்க் குறிப்பிட்டுள்ள மூவரும், கழகக் கட்டுப்பாடு -- ஒழுங்குமுறைகளை மீறியும், கழகத்தின் கண்ணியத்துக்குப் பொது மக்களிடையே இழுக்கு ஏற்படுத்தும் வகையிலும் செயல்பட்டு வருவதாலும், இதனைக் குறிப்பிட்டு தஞ்சை மாவட்டச் செயலாளர் பொறுப்பை மேற்கொண்டுள்ள மாவட்டத் துணைச் செயலாளரும் -- நாகை வட்டச் செயலாளரும் தலைமைக் கழகத்திற்குச் செய்துள்ள பரிந்துரைப்படியும், இன்று முதல் கழகத்திலிருந்து தற்காலிகமாக விலக்கி (சஸ்பெண்டு) வைக்கப்படுகின்றனர்; இவர்கள் பேரில் முறைப்படி விரைவில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

விலக்கி வைக்கப்படும் உறுப்பினர்கள் :—

1. சு. தென்கோவன்
2. அ. பால்ராசு எம்.சி.
3. சின்னப்பிள்ளை எம்.சி,

'அறிவகம்'
சென்னை-13
7-9-1972

இரா நெடுஞ்செழியன்,
பொதுச்செயலாளர், தி.மு.க.

பொதுப்பணித் துறை அமைச்சர்

எஸ்.ஜே. சாதிக் பாட்சா நிகழ்ச்சிகள்

செப். 10 காலை 9 மணி: கோபி செட்டிப்பாளையம்; மாலை: (கோவை)

செப். 11 முற்பகல்: கோவை; பிற்பகல்: உடுமலைத் தொகுதி.

செப். 12: உடுமலை.

உணவு -- வருவாய்த் துறை அமைச்சர்

ப. உ. சண்முகம் நிகழ்ச்சிகள்

செ. 9 மாலை 5 மணி: திருவண்ணாமலை -- கோசாலை கல் உடைப்பு ஆலையை துவக்கி வைத்தல்; 6 மணி: திருவண்ணாமலை கலைமை ஆசிரியர்கள் கழகப் பரிசளிப்பு விழாவில் கலந்துகொள்ளல்

செப். 10 காலை 9 மணி: வேலூர்; பிற்பகல்: திருவண்ணாமலை.

அறநிலைய அமைச்சர்

மு. கண்ணப்பன் நிகழ்ச்சிகள்

10—9—1972 காலை 4-30 மணி: கோவை அடைதல்; (கோவை அரசினர் பயண மாளிகை)

செப். 10 காலை 6 மணி: இருகூரில்—பல்லடம் வட்ட தி.மு.க. அவைத் தலைவர் திருமண விழாவில் கலந்துகொள்ளுதல்; 9 மணி: அங்கலக்குறிச்சி (பொள்ளாச்சி) திரு. மயில்சாமி இல்லத் திருமணத்தில் கலந்துகொள்ளுதல்; பிற்பகல் 2-30 மணி: தடாகம் உயர்நிலைப் பள்ளி மாணவர்கள் மன்ற இலக்கியப் பேரவைத் துவக்க விழா; 3-30 மணி: அனுபவி திரு. சுப்பிரமணியசுவாமிகள் திருப்பணி மண்டபக் கால்கோள் விழா; மாலை 5-30மணி: பெரியநாயக்கன் பாளையம் ஊராட்சி ஒன்றிய குடிதண்ணீர் தொட்டி திறப்பு -- காட்டுசுவாமிகள் ஆசிரம ஆண்டுவிழா; இரவு 7 மணி: சின்னத்தடாகம் பொதுமக்கள் வரவேற்பு -- பொதுக் கூட்டம்.

போக்குவரத்துத் துறை அமைச்சர்

ச. இராமச்சந்திரன் நிகழ்ச்சிகள்

செப். 9 காலை 9 மணி: மாயூரம் அசிக்காடு—திருமணம்; 11-மணி: வைதீசுவரன் கோவில் அரசு உயர்நிலைப் பள்ளி இலக்கியமன்ற ஆண்டு விழாவில் கலந்துகொள்ளல்; மாலை 4 மணி: அறுபாதி ஊராட்சி மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி அடிக்கல் நாட்டு விழா; 5-மணி: செம்பனார் கோவில் ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; 6-30 மணி: திருமணச் சேரி திருமண மண்டப அடிக்கல் நாட்டு விழா; 7 30 மணி: குத்தாலம் ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; இரவு 8-30 மணி: குத்தாலம்—பொதுமக்கள் வரவேற்பு.

செப். 10. காலை: வாலாஜாபூர்—திருமண நிகழ்ச்சியில் கலந்து கொள்ளல்; மாலை 6 30 மணி: தர்மபுரியில் நடைபெறும் பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ளல்.

செப். 11 காலை 11 மணி: தர்மபுரியில் நடைபெறும் திருமண நிகழ்ச்சியில் கலந்துகொள்ளல்; பிற்பகல் 1-மணி: திருப்பத்தூர்; மாலை 3-மணி: வெலகல்நத்தம் குடும்ப நலத் துணைக் கட்டடத் திறப்பு; 3-30 மணி: மல்லப்பள்ளி ஊராட்சியைச் சேர்ந்த 'அன்னசாகரம்' பள்ளிக் கட்டடத் திறப்பு; 4-மணி: அக்கிரகாரம் ஊராட்சியைச் சார்ந்த 'மோட்டூர்' மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி திறப்பு; 4-30 மணி: கட்டேரி ஊராட்சியைச் சார்ந்த 'பக்கிரி தர்கா' பள்ளிக் கட்டடத் திறப்பு; 5-மணி: நாட்ராம்பள்ளி ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்த தும்பேர் நீர்த்தேக்கத் தொட்டி திறப்பு; 5-30 மணி: சிக்கனாங்குப்பம் பள்ளிக் கட்டடத் திறப்பு; 6-மணி: கொடையாச்சி ஊராட்சி அலுவலகக் கட்டடத் திறப்பு; 6 30 மணி: ஜங்காலபுரம் பள்ளிக் கட்டடத் திறப்பு; இரவு 7-மணி: வெள்ளாளனூர் அரிசன காலனி நீர்த்தேக்கத் தொட்டி திறப்பு; 7-30 மணி: நாட்ராம்பள்ளி ஊராட்சி ஒன்றிய வரவேற்பு; 8-மணி: நாட்ராம்பள்ளி பொதுமக்கள் வரவேற்பு.

இந்தூர்கல்லூரிகள் மூடப்பட்டன

கிளர்ச்சியின் விளைவு

இந்தூர், செப். 8—

இந்தூர் மருத்துவக் கல்லூரியும் இந்தூர் பல்கலைக் கழகத்தைச் சேர்ந்த எல்லாக் கல்லூரிகளும் வியாழன் முதல் கால வரையறை இன்றி மூடப்பட்டன.

இந்தூர் மருத்துவக் கல்லூரியைச் சுற்றியுள்ள பகுதிகளில் 144 தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

மருத்துவப் பட்டதாரிகளிடையே நிலவும் வேலையின்மைப் பிரச்சினையைக் குறைக்கும் வகையில், மருத்துவக் கல்லூரிகளில் அனுமதிக்கப்படும் மாணவர்களின் எண்ணிக்கையைப் பாதியாகக் குறைக்க வேண்டுமென்று கோரி இந்தூர் மருத்துவமனையைச் சேர்ந்த அவுஸ் சர்ஜன்கள் கிளர்ச்சி செய்துவருகின்றனர்; இதற்கு ஆதரவு தெரிவித்து, மருத்துவக் கல்லூரி மாணவர்களும் கடந்த சனிக்கிழமை முதல் வேலை நிறுத்தம் செய்துவருகின்றனர்.

ஆறு மாதங்களில் 224 தொழில் லைசென்சுகள்

புதுடில்லி, செப். 7—

மத்திய தொழில் வளர்ச்சி அமைச்சகம் நடப்பு ஆண்டின் முதல் ஆறு மாத காலத்தில் 224 தொழில் லைசென்சுகளை வழங்கியிருக்கிறது; இவற்றில் புதிய நிறுவனங்களுக்காக 61 லைசென்சுகளும், பழைய நிறுவனங்களின் விரிவுக்காக 56 லைசென்சுகளும் அளிக்கப்பட்டன.

தமிழ்நாடு, மேற்கு வங்காளம் ஆகிய மாநிலங்கள் ஒவ்வொன்றுக்கும் 21 லைசென்சுகளும், மகாராட்டிரத்துக்கு 56 லைசென்சுகளும், குஜராத், உத்திரப் பிரதேசம் மாநிலங்களுக்கு முறையே 27, 23 லைசென்சுகளும் வழங்கப்பட்டன.

இந்தியைத் திணிக்க இந்திராவின் சாகசம்

—★—

ஆங்கிலம் இணைப்பு மொழியாக இருக்கக்கூடாதாம்

'வட்டார மொழியும் வளரவேண்டும்' எனப் பசப்புகிறார்

திருவனந்தபுரம், செப். 6—

"இந்தியாவில் ஆங்கிலம் இணைப்பு மொழியாக இருக்க முடியாது"

என்று தலைமையமைச்சர் இந்திரா காந்தி கூறினார்.

திருவனந்தபுரம் வந்திருந்த தலைமையமைச்சர் இந்திரா காந்தி மலையாள புத்தக வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டார்; அப்பொழுது அவர், இந்தியாவின் மொழிக் கொள்கை பற்றிக் குறிப்பிட்டதாவது: –

"வெளியுலகத்துடன் நாம் தொடர்பு கொள்ள ஆங்கிலத்தை பயன்படுத்திக்கொள்ள வேண்டும்; ஆனால், இந்தியாவுக்குள் ஆங்கிலம் ஒரு போதும் இணைப்பு மொழியாக இருக்கக்கூடாது.

அதே சமயத்தில், மாநில மொழி வளர்ச்சிக்கும் பாடுபட வேண்டும்; ஏனென்றால், மாநில மொழிகள்தான் நம் நாட்டு மக்களின் கண்களைத் திறக்க உதவும்.

ஐரோப்பிய நாடுகளில் வெளியிடப்படும் புத்தகங்கள் உடனடியாக வேறு மொழிகளில் மொழிபெயர்க்கப்பட்டுவிடுகின்றன; ஆனால் இந்திய மொழிகளுக்கு இந்த வசதி இல்லையே என்பது வருந்தத்தக்கதாகும்."

குழுக் கூட்டம்

கடலூர் வட்ட தி.மு.க. பொது உறுப்பினர்களின் அவசரக் கூட்டம், 10—9—72 காலை 10 மணிக்கு நெல்லிக்குப்பம் 'கிரிஜா' திரைப்பட அரங்கில் நடைபெறும்; வட்ட உறுப்பினர்கள் தவறாது கலந்து கொள்ளுமாறு வட்டச் செயலாளர் ஏ. வி. தண்டபாணி கேட்டுக் கொள்கிறார்.

உருக்குத்தொழில் நிலைமை பற்றி அரசு கவலை

புதுடில்லி, செப். 8—

இழப்பு மேலும் பெருகி--இறக்குமதி அதிகப்பதால், நாட்டின் உருக்குத் தொழில் நிலைமை பற்றி அரசு கவலை கொண்டிருக்கிறது.

கடந்த ஆண்டில் மிக அதிக அளவுக்கு (ரூ. 252 கோடி) உருக்கு இறக்குமதி செய்யப்பட்டது; இந்த ஆண்டு ரூ. 238 கோடிக்கு இறக்குமதி செய்யக் கூடுமாம்.

கடந்த நிதி ஆண்டு வரையில், இந்துஸ்தான் உருக்கு ஆலையில் ஏற்பட்ட இழப்பு ரூ. 41 கோடியாகும்; இந்த ஆண்டில் ஏற்கனவே ரூ. 9 கோடிக்கு இழப்பு ஏற்பட்டிருக்கிறது.

உற்பத்தியும் குறைகிறது; 1969—70-ல் 50 இலட்சம் டன்னாக இருந்தது -- 1970—71-ல் 48 இலட்சத்துக்குக் குறைந்து -- கடந்த ஆண்டில் 46 இலட்சம் டன்னுக்குக் குறைந்தது.

நிலக்கரிச் சுரங்கங்களின் உற்பத்தியும் குறைந்துபோய் விட்டது.

அண்ணா பண்ணையின் அரும்பணி

இந்திய வேளாண்மை ஆராய்ச்சி இயக்குநர் பாராட்டு

திருச்சி, செப். 6—

இந்திய வேளாண்மை ஆராய்ச்சிக் கழகத்தின் இயக்குநர் டாக்டர் எம். எஸ். சாமிநாதன், குடுமியான் மலையில் உள்ள அண்ணா பண்ணையைப் பார்வையிட்டுப் பெரிதும் பாராட்டினார்.

"அண்ணா பண்ணையும் -- கலைஞர் கருணாநிதி ஆராய்ச்சி நிலையமும் சேர்ந்து, தமிழ் நாட்டின் வேளாண்மை மறுமலர்ச்சிக்கு மிக முக்கியப் பங்காற்றும்" என்ற நம்பிக்கையை அவர் தெரிவித்தார்.

மணி--சாமி குழுவினரின் கலை நிகழ்ச்சிகள்

செப். 10: அருப்புக்கோட்டை; 11: வட்டம்; 12: கூமாப்பட்டி; 13: புத்தூர்; 14: தாழையூத்து; 15: பாபநாசம் லோயர் கேம்ப்; 16: வள்ளியூர்; 17: களக்காடு; 18: மதுரை மதிச்சயம்; 19, 20: மாயூரம்; 21: கரூர் வேலாயுதம்பாளையம்; 22, 23, 24: சேலம் மாவட்ட துணைச் செயலாளர் அன்புக்கரசு ஏற்பாடு செய்த நிகழ்ச்சிகள்; 25, 26: பழனி ஏற்பாடு செய்த நிகழ்ச்சிகள்; 27: கொழுப்பலூர்; 28: ஆரணி; 29: செய்யாறு (வட ஆற்காடு).

காஞ்சி கல்யாணசுந்தரம் எம்.பி. இல்லத் திருமணம்

திரு. காஞ்சி கல்யாணசுந்தரம் எம்.பி. அவர்களின் பேர்த்தி செல்வி: மலர்ச்செல்விக்கும் – செல்வன்: எஸ். எஸ். குமாருக்கும் 10—9—72 காலை 9 மணியளவில், காஞ்சிபுரம் வைகுண்ட பெருமாள் கோவில் தெரு, 17 எண்ணுள்ள இல்லத்தில் கழகத் தலைவர் கலைஞர் தலைமையிலும் – பொதுச்செயலாளர் நாவலர், பொருளாளர் புரட்சி நடிகர் எம்.ஜி.ஆர். ஆகியோர் முன்னிலையிலும் திருமணம் நடைபெறும்.

தமிழக -- புதுவை அமைச்சர்கள், சட்டமன்ற -- நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கழக முன்னணித் தோழர்கள் வாழ்த்துரை வழங்குவர்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக திரு. இரா. செழியன் எம்.ஏ. எம்.பி. அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு [illegible] அச்சகத்தில் ([illegible] தெரு; சென்னை-13) [illegible]